AL/2014/46/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

හින්දු ශිෂ්ටාචාරය I
இந்து நாகரிகம் I
Hindu Civilization I

46 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (×)** இடுவதன் மூலம் காட்டுக.

**1.** புராணங்கள் சிவனுக்கு வழங்கும் 'அட்டமூர்த்தி' என்ற சிறப்புப் பெயரால் குறிப்பிடப்படும் எட்டு அம்சங்களுள் ஐந்தினைக் கொண்ட தொகுதி
(1) நிலம், நீர், தீ, காற்று, சூரியன்
(2) நீர், தீ, காற்று, ஆகாயம், திரிசூலம்
(3) சூரியன், சந்திரன், காற்று, கங்கை, லிங்கம்
(4) நிலம், நீர், தீ, யஜமானன், அவதாரம்
(5) தீ, காற்று, ஆகாயம், சந்திரன், லிங்கம்

**2.** இந்து நாகரிக மூலாதாரங்களில் ஒன்றாகிய கல்வெட்டுக்களில் இடம்பெறும் 'ஸ்வஸ்தி ஸ்ரீ' என்பது குறித்து நிற்கும் பொருள்
(1) நீடுழி வாழ்க (2) மங்களமுண்டாகுக (3) உண்மை பேசு
(4) ஸ்ரீ தெய்வத்திற்கு வணக்கம் (5) வெற்றி கிடைப்பதாக

**3.** வழிபாட்டின்போது யாகங்களில் அளிக்கப்படும் அவிகளைத் தேவர்களிடத்து கொண்டு சேர்ப்பிக்கும் வேதம் போற்றும் தெய்வம்
(1) சோமன் (2) அக்கினி (3) மித்திரன் (4) வருணன் (5) உருத்திரன்

**4.** சிவாகமங்கள் கொண்டுவிளங்கும் நான்கு பிரிவுகளின் பெயர்களைக் உள்ளடக்கிய தொகுதி
(1) சரியாபாதம், கிரியாபாதம், சிவபாதம், யோகபாதம்
(2) கிரியாபாதம், ஞானபாதம், தர்மபாதம், காமிகபாதம்
(3) சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம்
(4) கிரியாபாதம், யோகபாதம், வேதாந்தபாதம், சிவபாதம்
(5) சரியாபாதம், கிரியாபாதம், தர்மபாதம், உருத்திரபாதம்

**5.** யமனுக்கும் நசிகேதனுக்கும் இடையே நடைபெற்ற ஆன்ம விசாரணை பற்றிய உரையாடலைக் கொண்டுள்ள உபநிடதம்
(1) பிருகதாரண்யக உபநிடதம் (2) சாந்தோக்கிய உபநிடதம் (3) கடோபநிடதம்
(4) ஈசோபநிடதம் (5) முண்டகோபநிடதம்

**6.** சைவசித்தாந்த சாத்திரங்கள் மூலம் கோட்பாடுகள் உருவாக வழிவகுத்த சந்தான பரம்பரையினருள் மூவரது பெயர்கள் அடங்கிய தொகுதி
(1) திருநாவுக்கரசர், பட்டினத்தார், தாயுமானவர்
(2) குமரகுருபரர், திருஞானசம்பந்தர், மறைஞானசம்பந்தர்
(3) திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார்
(4) மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார்
(5) வாகீசமுனிவர், உய்யவந்ததேவர், மணிவாசகங்கடந்த தேவனார்

**7.** வைணவ ஆகம மரபுடன் தொடர்புடைய பெயர்
(1) மகுடம் (2) பௌஷ்கரம் (3) வைகானஸம்
(4) காரணம் (5) வாதுளம்

[பக். 2 ஐப் பார்க்க

8. இறைவனுக்குப் பல நாமங்களைக் கூறி வழிபடும் மரபுக்கு வழிவகுத்தது
(1) இருக்கு வேதம் (2) யசுர் வேதம் (3) மகாபாரதம்
(4) பிரம்மசூத்திரம் (5) மனுஸ்மிருதி

9. தர்ம சாத்திரங்களுக்கு வழங்கப்படும் பெயர்களுள் ஒன்று
(1) இயமம் (2) நியமம் (3) ஆசாரம் (4) நியதி (5) ஸ்மிருதி

10. வட இந்திய பக்தி நெறியாளர்களில் ஒருவராகிய மீராபாய் இயற்றிய நூல்களுள் மூன்றின் பெயர்கள் அடங்கிய தொகுதி
(1) சத்போதம், ஸ்ரீபாஷ்யம், தேவபாணி
(2) தாசபோதம், ஆனந்தவனபுவனம், கீதகோவிந்த டீகா
(3) மகாலட்சுமி தோத்திரம், கணேச தோத்திரம், வேதாந்த சூடாமணி
(4) வச்சிரதண்டம், ஞானரத்தினாவளி, வேதாந்தசாரம்
(5) ராககோவிந்த், ருக்மணி மங்களம், வேதாந்த தீபம்

11. தென்கிழக்காசிய நாடுகளில் இந்து அரசியல் முறையின்படி அரசர்களைக் கடவுளின் அவதாரமாகப் போற்றும் வழிபாடு
(1) இராஜகுரு வழிபாடு (2) கணங்கள் வழிபாடு (3) தேவராஜ வழிபாடு
(4) பூத வழிபாடு (5) அர்ச்சனை வழிபாடு

12. "என்னை இருளில் இருந்து ஒளிக்கு இட்டுச் செல்வாயாக" என்ற உபாசனைப் பாடல் இடம்பெறும் உபநிடதம்
(1) சுவேதாஸ்வதர உபநிடதம் (2) பிருகதாரணியக உபநிடதம் (3) ஈசோபநிடதம்
(4) கடோபநிடதம் (5) ஐதரேய உபநிடதம்

13. தர்மசாத்திரங்களின் மூன்று காண்டங்களின் பெயர்களைக் கொண்ட தொகுதி
(1) ஞான காண்டம், ஆரண்ய காண்டம், யுத்த காண்டம்
(2) ஆசார காண்டம், வியவகார காண்டம், பிராயச்சித்த காண்டம்
(3) ரிஷி காண்டம், ஆசார காண்டம், ஞான காண்டம்
(4) கர்ம காண்டம், ஞான காண்டம், யோக காண்டம்
(5) பால காண்டம், சுந்தர காண்டம், பிராயச்சித்த காண்டம்

14. பல்லவ மன்னர்களின் ஆட்சியில் தலைநகரமாக விளங்கியது
(1) தஞ்சாவூர் (2) மதுரை (3) திருவண்ணாமலை
(4) காஞ்சிபுரம் (5) திருச்செந்தூர்

15. மங்களாசனம் பெற்ற திவ்விய தேசங்களின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டவர்கள்
(1) நாயன்மார்கள் (2) ஆழ்வார்கள் (3) ரிஷிகள்
(4) பௌராணிகர்கள் (5) சதுர்வேதி மங்கலத் தலைவர்கள்

16. குளக்கோட்டன் திருக்கோணேஸ்வர ஆலயத்தில் மேற்கொண்ட திருப்பணிகள் பற்றி அறிந்துகொள்வதற்குப் பெருமளவில் உதவும் ஆதார நூல்
(1) சிவபுராணம் (2) வாமதேவபத்ததி (3) பௌஷ்கராகமம்
(4) ஸ்ரீ தட்சிணகைலாச புராணம் (5) கோயிற் புராணம்

17. பொலன்னறுவைப் பிரதேசத்திற் காணப்பட்ட கோயில்களில் அதிகமானவை
(1) சக்தி ஆலயங்கள் (2) சிவாலயங்கள் (3) விஷ்ணு ஆலயங்கள்
(4) முருகன் ஆலயங்கள் (5) விநாயகர் ஆலயங்கள்

18. இசையில் புலமை பெற்றிருந்தமைக்காக 'வாத்ய வித்யாதரன்', 'வீணாதரன்' ஆகிய விருதுப் பெயர்கள் வழங்கப்பெற்ற பல்லவ மன்னன்
(1) நரசிம்மன் (2) மகேந்திரவர்மன் (3) இராசசிம்மன்
(4) நந்திவர்மன் (5) பரமேசுவரவர்மன்

19. இலங்கையில், சமய அறிவைச் சாதாரண மக்களுக்கு எளிய முறையில் விளக்க உதவிய கதாப்பிரசங்கங்களை நிகழ்த்துவதில் புகழ்பெற்ற இருவரின் பெயர்கள் அடங்கிய தொகுதி
(1) சேர் பொன். இராமநாதன், சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்
(2) ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வட்டுக்கோட்டை சங்கர சுப்பையர்
(3) சுவாமி விபுலானந்தர், சுவாமி ஞானப்பிரகாசர்
(4) இந்துபோர்ட் சு. இராசரத்தினம், யோகர் சுவாமிகள்
(5) பண்டிதர் கந்தையா, பண்டிதர் கணபதிப்பிள்ளை

20. இலங்கையில் 'ஜனநாதமங்கலம்' என அழைக்கப்பட்ட நகரம்
(1) அனுராதபுரம் (2) பொலன்னறுவை (3) கந்தளாய்
(4) கண்டி (5) யாழ்ப்பாணம்

[பக். 3 ஐப் பார்க்க

**21.** லண்டனில் உள்ள இந்துக் கோயில்களில் இலங்கைத் தமிழர்களால் முதன்முதலாக நிர்மாணிக்கப்பட்டது
(1) ஈஸ்ற்காம் ஸ்ரீ முருகன் கோயில்
(2) அர்க் உயர் குன்றுவாசல் முருகன் கோயில்
(3) விம்பிள்டன் ஸ்ரீ கணபதி கோயில்
(4) ரூட்டிங் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
(5) லண்டன் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்

**22.** மகாநிர்வாண தந்திரம், திரிபுர ரகசியம் ஆகிய நூல்கள் சிறப்பிக்கும் தெய்வம்
(1) சிவன் (2) சக்தி (3) விநாயகர் (4) முருகன் (5) பைரவர்

**23.** ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய நூல்களுள் மூன்று நூல்களின் பெயர்களைக் கொண்ட தொகுதி
(1) சைவதூஷண பரிகாரம், சைவ வினாவிடை, கொன்றை வேந்தன்
(2) சைவ வினாவிடை, பாலபாடம், சைவதூஷண பரிகாரம்
(3) வினாவெண்பா, சைவ வினாவிடை, கொடிக்கவி
(4) பாலபாடம், சைவ வினாவிடை, நெஞ்சுவிடுதூது
(5) சைவ வினாவிடை, கோயிற் புராணம், புட்பவிதி

**24.** இந்து மருத்துவ சிந்தனைகளை அதிகளவில் உள்ளடக்கிய பேஷஜானி சூக்தம், ஆயுஷ்யானி சூக்தம் ஆகியவற்றைக் கொண்டது
(1) இருக்கு வேதம் (2) அதர்வ வேதம் (3) சுக்கிலயசுர் வேதம்
(4) சாம வேதம் (5) பிரம்மசூத்திரம்

**25.** இந்துக்களது சோதிடவியல் பற்றி அறிவதற்கு உதவும் கி. பி. 6ஆம் நூற்றாண்டிற்குரிய பிருகத்சம்கிதை நூலின் ஆசிரியர்
(1) வராகமிகிரர் (2) ஆரியபட்டர் (3) புளிசர் (4) வாசிஷ்டர் (5) லாடதேவர்

**26.** காசிவாசி செந்தில்நாதையர் இயற்றிய சைவ சமயம் சார்ந்த நூல்களுள் இரண்டினைக் கொண்ட தொகுதி
(1) சைவபோதம், சிவாலய தரிசன விதி
(2) புட்பவிதி, சைவப் பிரகாசிகை
(3) கந்தபுராண நவநீதம், சைவ வேதாந்தம்
(4) தேவாரம் வேதசாரம், சிவயோகரத்தினம்
(5) முப்பொருள் விளக்கம், முத்தி நிச்சயம்

**27.** தமிழகத்தில் வீரசைவ மரபினை நிலைநிறுத்திய பெரியார்
(1) அருணகிரிநாதர்
(2) தாயுமானவர்
(3) துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்
(4) குமரகுருபரர்
(5) அபிராமிபட்டர்

**28.** சிவனது மகத்துவத்தைப் போற்றும் சிவானந்த லகரி என்ற நூலை இயற்றியவர்
(1) பாதராயணர் (2) கோவிந்தர் (3) ஸ்ரீரமணர் (4) ஆதிசங்கரர் (5) மத்துவர்

**29.** மட்டக்களப்பு மக்களிடையே சைவப் பண்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் பற்றி பிரசங்கங்கள் மூலம் தெளிவுபடுத்திய பெரியார்
(1) நாகையா ஆசிரியர் (2) சித்திவிநாயகர் ஆசிரியர் (3) சைவப்புலவர் அருணாசலதேசிகர்
(4) பண்டிதர் த. கிருஷ்ணபிள்ளை (5) சரவணமுத்தர்

**30.** நாட்டார் வழக்கிற் கடைப்பிடிக்கப்படும் அறங்களில் **அடங்காத** ஒன்று
(1) விட்டுக்கொடுத்தல் (2) தானதர்மம் (3) தியாகம்
(4) தனித்துச் செயற்படல் (5) இரக்கம் காட்டல்

**31.** வீடுபேறு அடையத் தகுதியில்லாதவர்கள் நித்திய நரகத்தில் உழல்வர் எனக் கூறியவர்
(1) சங்கரர் (2) கோவிந்தர் (3) யாக்ஞவல்கியர்
(4) மத்துவர் (5) இராமானுஜர்

**32.** விஜயநகர ஆட்சியில் கிருஷ்ணதேவராயரின் அரண்மனைப் புலவராகிய சானாவாதிம்மர் மகாபாரதத்திற்கு எழுதிய உரையின் பெயர்
(1) யோகவாசிஷ்டம் (2) கிருஷ்ணசந்தம் (3) ஸ்ரீபாஷ்யம்
(4) சத்போதம் (5) சனத்சுஜாதீயம்

**33.** இராமானுஜர் தமது விசிஷ்டாத்வைதக் கோட்பாட்டில் பயன்படுத்தும் 'அப்பிரதக்சித்தி' என்பதன் மூலம் விளக்கப்படுவது
(1) இறைவன், உயிர், உலகம் ஆகியவற்றுக்கிடையிலான பிரிக்க முடியாத தொடர்பு ஆகும்.
(2) பிரம்மசூத்திரத்திற்கும் பகவத்கீதைக்கும் இடையே உள்ள தொடர்பு ஆகும்.
(3) திருக்கோயிலுக்கும் பக்தர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு ஆகும்.
(4) ஆன்மாவுக்கும் உலகுக்கும் இடையே உள்ள தொடர்பு ஆகும்.
(5) கன்மவினைகளுக்கும் ஆன்மாவுக்கும் இடையே உள்ள தொடர்பு ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

**34.** மெய்கண்டார் தம்மை ஆட்கொண்டபோது தோற்றுவித்த சித்தாந்த அனுபவங்களை அருணந்தி சிவாசாரியார் சிறப்பாக எடுத்துக்கூறும் நூல்
(1) உண்மை விளக்கம் (2) இருபா இருபஃது (3) திருக்களிற்றுப்படியார்
(4) திருவுந்தியார் (5) நெஞ்சுவிடுதூது

**35.** நடராஜ விக்கிரகத்தின் சமய கலாதத்துவ சிறப்பினைக் கூறும் சிவானந்த நடனம் (The dance of Siva) என்ற ஆய்வு நூலின் ஆசிரியர்
(1) நவரத்தினம் (2) கணபதி ஸ்தபதி (3) கலாயோகி ஆனந்த குமாரசுவாமி
(4) கலாகேசரி தம்பித்துரை (5) சோ. நடராஜன்

**36.** குப்தர் காலத்தில் இடம்பெற்ற இந்துப் பண்பாட்டு வளர்ச்சி பற்றிய விடயங்களோடு **தொடர்புபடாத** ஒன்று
(1) கருட சின்னம் அரச சின்னமாகியமை (2) வைதீகக் கல்வி மரபின் வளர்ச்சி
(3) பஞ்சாயதனக் கோயில் அமைப்பு (4) வைணவ மதச் செல்வாக்கு
(5) திருமுறைகள் தொகுக்கப்பட்டமை

**37.** உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சைவசித்தாந்த சாஸ்திர நூல் வரிசையில் **அடங்காத** ஒன்று
(1) சிவப்பிரகாசம் (2) திருவுந்தியார் (3) திருவருட்பயன்
(4) வினா வெண்பா (5) கொடிக்கவி

**38.** தென்கிழக்காசிய நாடுகளில் பரவிய இந்துப் பண்பாட்டு அம்சங்கள் தொடர்பான தகவல்களோடு **பொருந்தாத** கூற்று
(1) வணிகம், அரசியல் ஆகிய தொடர்புகளால் இந்துப் பண்பாடு பரவியது.
(2) அரச சபைகளில் இந்து சமய முறைப்படி பட்டாபிஷேக விழாக்கள் நடைபெற்றன.
(3) அரசர்கள் கடவுளர்களால் அனுப்பப்பட்டவர்கள் என்ற நம்பிக்கை சம்பா நாட்டில் நிலவியது.
(4) சமஸ்கிருத மொழி தென்கிழக்காசிய மொழிகளுடன் சங்கமமாகியது.
(5) அங்கோர்வாட் சிவாலயம் சூரியவர்மனால் யாவாவிற் கட்டப்பட்டது.

**39.** மகாபுராணங்கள் பற்றிய விளக்கங்களோடு **பொருந்தாத** கூற்று
(1) மகாபுராணங்கள் இந்துப் பண்பாட்டுக் கருவூலமாகும்.
(2) சைவ, வைணவ புராணங்கள் பிரசித்தமானவையாகும்.
(3) பஞ்சலட்சணங்கள், தசலட்சணங்கள் ஆகியவற்றுடன் கூடியவையாகும்.
(4) மகாபுராணங்கள் எண்ணிக்கையில் பத்து ஆகும்.
(5) அவை விரதம், தீர்த்தம், தலயாத்திரை, தோத்திரம் பற்றிக் கூறுவனவாகும்.

**40.** இராமகிருஷ்ண பரமஹம்சரது சமய வாழ்வியலோடு **தொடர்பற்ற** கூற்று
(1) இந்துமத மறுமலர்ச்சியாளர்களில் தலைசிறந்தவர்.
(2) சாக்த சமய பக்தர்.
(3) மக்களுக்குச் சேவை செய்வதே நடைமுறை வேதாந்தம் என்று சாதனையில் காட்டியவர்.
(4) சமய சமரசக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாதவர்.
(5) பிற உயிர்களையும் தன்னுயிர் போல் போற்ற வேண்டும் எனப் போதித்தவர்.

- மேல்வரும் பகுதிகளிலே தரப்பட்டுள்ள சொற்களில் **இவ்விரண்டு** சொற்கள் குறிப்பிட்ட **ஒரு** விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் **41** தொடக்கம் **45** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான தொகுதியைத் தெரிவுசெய்து, விடைத்தாளில் அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>புராணபடனம் | B<br>வர்ணாச்சிரம கோட்பாடு | C<br>சோதிப்பிழம்பின் அடிமுடி தேடல் | D<br>பிரபக்தி | E<br>உண்மை விளக்கம் |
| F<br>மனவாசகங் கடந்ததேவர் | G<br>விதேக முத்தி | H<br>சைவப் பிரசங்கம் | I<br>இராஜதர்மம் | J<br>இலிங்கோற்பவர் |

**41.** தர்மசாத்திரம் கூறும் விடயங்களோடு தொடர்புடைய சோடி
(1) A G (2) B C (3) B I (4) C D (5) D H

**42.** புராணங்கூறும் சிவன் பற்றிய தெய்வீக வரலாற்று மரபோடு தொடர்புடைய சோடி
(1) A D (2) A I (3) C J (4) D G (5) D J

**43.** சைவசித்தாந்த சாத்திர மரபோடு தொடர்புடைய சோடி
(1) A C (2) A J (3) D F (4) D H (5) E F

**44.** விசிட்டாத்வைத தத்துவக் கோட்பாட்டோடு தொடர்புடைய சோடி
(1) B F (2) B H (3) D G (4) D I (5) G H

**45.** சைவ சமய நெறியை மேம்படுத்த நாவலர் பெருமான் கையாண்ட வழிமுறைகளைக் கொண்ட சோடி
(1) A C (2) A D (3) A H (4) B I (5) D I

[பக். 5 ஐப் பார்க்க

The National e-Learning Portal for the General Education

- இல. **46** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை **I, II, III, IV** ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்து, அத்தொகுதிக்கான இலக்கத்தைக் குறிப்பிடுக.

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>திருவுருவ வழிபாடு | F<br>பிரமம் மட்டுமே உண்மைப் பொருள் | K<br>மகாயான பௌத்தத்திற்கு ஆதரவு | P<br>காந்தாரக்கலை |
| B<br>பசுவதையை எதிர்த்தமை | G<br>தீபாராதனை | L<br>சத்தியபிரகாஷ் நூல் இயற்றியமை | Q<br>சைவசித்தாந்த ஞானநூல் எழுதியமை |
| C<br>ஆரிய சமாஜம் | H<br>வட இந்தியாவின் மேற்குப் பகுதியில் இந்துப் பண்பாடு பரவியமை | M<br>ஆறு பிரமாணங்களை ஏற்றல் | R<br>பஞ்சபுராணம் ஓதுதல் |
| D<br>கனிஷ்கன் | I<br>தயானந்த சரஸ்வதி | N<br>வங்காளத்தில் வடமொழி நூல் கற்றமை | S<br>பிரஸ்தானதிரய நூல்களுக்கு உரை எழுதியமை |
| E<br>சங்கரர் | J<br>சிதம்பரத்தில் வாழ்க்கை | O<br>அர்ச்சனை | T<br>சுத்தி என்னும் தீட்சை மூலம் இந்து தர்ம பாதுகாப்பு |

**46.** வட இந்தியாவில் எழுச்சி பெற்ற குஷாணப் பேரரசோடு தொடர்புடைய தொகுதி
(1) AHLP (2) DFNP (3) DHKP (4) DHLS (5) EFLT

**47.** ஆகம மரபிலான திருக்கோயில் வழிபாட்டோடு தொடர்புடைய தொகுதி
(1) AGOR (2) AHNT (3) AJOT (4) BJKQ (5) EHOR

**48.** அத்வைத வேதாந்த தத்துவக் கோட்பாட்டோடு தொடர்புடைய தொகுதி
(1) AFMT (2) EFMS (3) EHMT (4) EHNS (5) EJNS

**49.** நவீன இந்துமத சீர்திருத்த இயக்கம் ஒன்றுடன் தொடர்புடைய தொகுதி
(1) CFMS (2) CFNT (3) CILT (4) CJMS (5) EHMT

**50.** திருநெல்வேலி ஞானப்பிரகாச சுவாமிகளோடு தொடர்புடைய தொகுதி
(1) AFOR (2) AGNS (3) BFNR (4) BJLS (5) BJNQ

* * *

8513

AL/2014/46/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

හින්දු ශිෂ්ටාචාරය II
இந்து நாகரிகம் II
Hindu Civilization II

46 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் வேதங்களின் முக்கியத்துவத்தினை மேல்வருவன தொடர்பாகச் சுருக்கமாக விளக்குக.
 (அ) சமய மரபு
 (ஆ) தத்துவ மரபு
 (இ) சமுதாயம்

**2.** தமிழகத்தில் சைவ பக்தி இயக்கம் வளம் பெற்றவாற்றை மேல்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்க.
 (அ) சைவ பக்தி இயக்கம் வளம்பெறுவதிற் செல்வாக்குச் செலுத்திய அக்காலச் சமய பண்பாட்டு நிலைகள்
 (ஆ) நாயன்மாரின் பங்கும் பணியும்
 (இ) திருத்தலங்கள்

**3.** அறுவகைச் சமயநெறிகளில் ஒன்றாகிய கௌமாரம் பற்றி மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.
 (அ) குமாரக் கடவுள் வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்
 (ஆ) அருணகிரிநாதரும் கந்தபுராணமும்
 (இ) திருமுருகாற்றுப்படை

## பகுதி II

**4.** சோழர் காலத்திலே தமிழ் நாட்டிற் கோயிற் கட்டடக்கலை வளர்ச்சி பெற்றவாற்றை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.
 (அ) சோழ மன்னர்கள் அமைத்த கோயில்கள்
 (ஆ) கட்டடக்கலையின் பிரதான வளர்ச்சி நிலைகள்
 (இ) கட்டட அமைப்பில் விமானத்தின் சிறப்பம்சங்கள்

**5.** "இந்து சமய தத்துவங்களிற் சைவசித்தாந்தம் தனித்துவம் பெற்று விளங்குகின்றது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புகளைக் கருத்திற்கொண்டு பரிசீலிக்குக.
 (அ) சைவசித்தாந்தத்திற்குரிய பிரமாண நூல்களும் அவற்றின் சிறப்பம்சங்களும்
 (ஆ) முப்பொருள் உண்மை
 (இ) ஆன்மிக வாழ்வு மேன்மையுறச் சைவசித்தாந்தம் கூறும் வழிமுறைகள்

**6.** "இந்து சமய, பண்பாட்டு வளர்ச்சியில் தாயுமானசுவாமிகள் ஈட்டிய சாதனைகள் தனித்துவம் மிக்கவை." இக்கூற்றினை விளக்குக.

**7.** இந்துக்களின் புராதனக் கல்விப் பாரம்பரியத்தின் முக்கிய அம்சங்களை மேல்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்க.
 (அ) வாழ்வியல்
 (ஆ) அரசியற் கல்வி
 (இ) கல்வி நிறுவனங்கள்

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினைப்** பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.
 (அ) பரதநாட்டிய சாஸ்திரம்
 (ஆ) தர்மசாத்திரங்கள்
 (இ) தட்சிணாமூர்த்தி வடிவம்
 (ஈ) இராமகிருஷ்ண மிஷன்
 (உ) திருக்கேதீச்சரம்
 (ஊ) இந்து அறிவியல் வளர்ச்சியில் கணிதவியல்

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය I
இஸ்லாமிய நாகரிகம் I
Islamic Civilization I

**47 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** பின்வருவனவற்றுள் மிகச் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) மு.்.தஸிலாக் கோட்பாடு அப்பாஸியர் ஆட்சிக் காலம் முழுவதிலும் பிரபல்யம் பெற்றிருந்தது.
(2) காலித் பின் பகாயா தொடர்பிலான கல்வெட்டு ஒன்று கொழும்பில் கண்டெடுக்கப்பட்டது.
(3) கலீபா அப்துல் மலிக் பின் மர்வான் காலத்தில் சிந்து தேசம் வெற்றி கொள்ளப்பட்டது.
(4) எகிப்திலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட ஒறாபி பாஷா இலங்கையில் வபாத்தானார்கள்.
(5) அறிஞர் சித்திலெவ்வைக்கு அவரது தந்தை இட்ட பெயர் முஹம்மது இஸ்மாயில் ஆகும்.

**2.** நிலாமுல் முல்க் என்பவர் பிரதமராகப் பதவி வகித்த சிற்றரசின் பெயர் என்ன ?
(1) ஸபவி (2) ஐயூபி (3) மம்லூகி (4) புவைதி (5) செல்ஜுக்கி

**3.** தபூக் யுத்தம் நபிகளார் கலந்து கொண்ட இறுதி யுத்தமாகும். அந்த யுத்தச் செலவுக்காக, ஸஹாபாக்கள் தம் சொத்துகளை வாரி இறைத்தனர். தனது முழுச் சொத்தையும் வழங்கிய ஸஹாபி
(1) ஸ.்.து பின் அபீ வக்காஸ் (ரழி) (2) உமர் பின் கத்தாப் (ரழி)
(3) உஸ்மான் பின் அப்பான் (ரழி) (4) அபூபக்ர் பின் குஹாபா (ரழி)
(5) அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (ரழி)

**4.** 'அல்-கானூன் பித் திப்பி' என்ற நூலை எழுதிய அறிஞர்
(1) ஹுனைன் பின் இஸ்ஹாக் (2) ஜாபிர் பின் ஹய்யான்
(3) அலி பின் ஸீனா (4) ஸகரிய்யா அர்-ராஸி
(5) அஸ்-ஸஹ்ராவி

**5.** பக்தாத்தில் அப்பாஸிய கிலாபத்தும் துருக்கியில் உஸ்மானிய கிலாபத்தும் வீழ்ச்சியடைந்த ஆண்டுகள் முறையே
(1) 1254, 1922 (2) 1254, 1926 (3) 1254, 1928 (4) 1256, 1926 (5) 1258, 1924

**6.** கீழே **'X'** இன் கீழ் வரலாற்று நூல்கள் சிலவற்றின் ஆசிரியர்களின் பெயர்களும் **'Y'** இன் கீழ் நூல்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| (i) இபுனு கல்தூன் | A – தாரீக் அர் ருஸ்ல் வல் முலூக் |
| (ii) இபுனு ஸஅத் | B – தபகாதுல் கபீர் |
| (iii) அத் தபரீ | C – அஜாஇபுல் ஹின்த் |
| (iv) அல்-பலாதுரி | D – முகத்திமா |
| (v) இபுனு ஸஹ்ரயார் | E – புதூஹுல் புல்தான் |

இங்கு **X** இற்கமைய **Y** யைச் சரியாக ஒழுங்குபடுத்தினால் வரும் விடை எது ?
(1) A B C D E (2) B C A E D (3) C E D A B (4) D A C B E (5) D B A E C

[பக். 2 ஐப் பார்க்க

7. ‘தஜ்தீத்’ எனும் பதம் உணர்த்தும் கருத்து என்ன ?
   (1) இஸ்லாத்தில் சேர்ந்துள்ள இஸ்லாம் அல்லாதவற்றை நீக்கி இஸ்லாத்தை உண்மை நிலைக்குக் கொண்டு வருதல்
   (2) பொருளாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கி வாழ்வை நெறிப்படுத்திக் கொள்ளல்
   (3) நவீன சிந்தனைக்கேற்ப இஸ்லாத்தை வடிவமைத்தல்
   (4) இஸ்லாத்தில் புதுக் கருத்துகளைச் சேர்த்துக் கொள்ளல்
   (5) சமூகத்தில் எழும் பிரச்சினைகளுக்கு இஜ்திஹாத் வழியில் தீர்வுகாணல்

8. அப்பாஸிய கிலாபத்தின்போது அதிகளவு பிரசித்தமடைந்திருந்த சிந்தனைப் பிரிவுகளுள் மு.்தஸிலா பிரதானமானது. முறையே மு.்தஸிலாவின் உச்ச வளர்ச்சியும் வீழ்ச்சியும் நிலவிய ஆட்சிக் காலங்கள் எவை ?
   (1) ஹாரூன், வாதிக் (2) ஹாதி, அமீன் (3) ம.்மூன், முதவக்கில்
   (4) மு.்தஸிம், வாதிக் (5) ம.்மூன், மு.்தஸிம்

9. இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் பாதுகாப்புக்கென முதன்முதலில் கடற்படை ஒன்றினை நிறுவிய கலீபா
   (1) முஆவியா (ரழி) (2) அபூபக்ர் (ரழி) (3) அலி (ரழி)
   (4) உமர் (ரழி) (5) உஸ்மான் (ரழி)

10. ‘யத்ரிப்’ எனும் பெயர் மதீனாவைக் குறித்தது போல ஷாம், மிஸ்ர், அந்தலூஸ் எனும் பெயர்கள் குறித்தவை முறையே
   (1) டமஸ்கஸ், கெய்ரோ, மதாஇன் (2) ஜெருசலம், பக்தாத், பஸ்ரா
   (3) டமஸ்கஸ், மதாஇன், இந்தோனேசியா (4) சிரியா, எகிப்து, ஸ்பெயின்
   (5) சிரியா, எகிப்து, பலஸ்தீனம்

11. அறிஞர் அல்-குவாரிஸ்மி அவர்களால் எழுதப்பட்ட கணித நூல்
   (1) அல்-கானூன் அல் மஸ்ஊதி (2) தல்கீன் பீ அ.்மாலில் ஹிஸாப்
   (3) ஹிஸாப் அல்-ஹவாஇ (4) ஹிஸாப் அல்-ஜபர் வல் முகாபலா
   (5) மகாலத் பில் ஜபரி வல் முகாபலா

12. முஸ்லிம்களால் வளர்க்கப்பட்ட தனித்துவமான கலையொன்றாக அரபு எழுத்தணி கருதப்படுகிறது. பின்வருவனவற்றுள் நான்கு பெயர்கள் எழுத்தணி வகைகளைக் குறிக்கும். எழுத்தணி வகை **அல்லாதது** எது ?
   (1) நஸ்ஹி (2) றிகா (3) ஷிவ்கானி (4) ஸுலுஸி (5) முஹக்கிக்

13. பின்வருவனவற்றுள் இஜ்திஹாத் புலப்படுத்தும் கருத்துக்கு **முரணான** கூற்று எது ?
   (1) இஜ்திஹாத் நபிகளார் காலம் முதல் இஸ்லாமிய சமூகத்தில் நிலவும் நடைமுறையொன்றாகும்.
   (2) ‘இஸ்லாம் எல்லாக் காலத்துக்கும் பொருத்தமானது’ என்பதை இஜ்திஹாத் உறுதிப்படுத்துகிறது.
   (3) இஜ்திஹாத் ஒரு சட்ட வழிமுறையேயன்றி சட்ட மூலாதாரம் அல்ல.
   (4) நவீன இஸ்லாமிய சட்டக் கூட்டமைப்புகள் சில இஜ்திஹாத் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.
   (5) மத்ஹபுகளின் தோற்றத்துக்கும் இஜ்திஹாத்துக்குமிடையே தொடர்பேதும் காணப்படுவதில்லை.

14. பின்வருவனவற்றுள் ஒன்றுக்கொன்று நேர்முரண் **அற்ற** சொற்சோடியைத் தெரிவுசெய்க.
   (1) தௌஹீத் - ஷிர்க் (2) கதரிய்யா - ஜபரிய்யா (3) துன்யா - ஆகிரா
   (4) ஜாஹிலிய்யா - இஸ்லாமிய்யா (5) தஸ்கியா - இஹ்ஸான்

15. ஜாஹிலிய்யாக் காலத்தில் தம் பெண் குழந்தைகளை உயிரோடு புதைக்கும் வழக்கத்தைப் பின்பற்றிய கோத்திரம்
   (1) ஸுஃப்யான் (2) குழாஆ (3) ஹஸ்ரஜ் (4) தமீம் (5) கைஸ்

16. கலீபா உமர் (ரழி) தனது கிலாபத்தின்போது ஸஹாபாக்கள் மதீனாவை விட்டும் வெளியேறுவதைத் தடை செய்திருந்தமைக்கான காரணம்,
   (1) ஸஹாபாக்கள் புது இடங்களுக்குச் செல்வதால் அசௌகரியத்துக்குள்ளாவர் என்ற அச்சம் ஆகும்.
   (2) ஸஹாபாக்கள் இஸ்லாமிய சமூகத்தின் மூத்த அங்கத்தினர்களாதலால், அவர்களை கௌரவமாக நடத்த வேண்டுமென்ற விருப்பம் ஆகும்.
   (3) ஸஹாபாக்கள் சிறந்த வீரர்களாதலால், எதிரிகளிடமிருந்து மதீனாவைப் பாதுகாக்க அவர்களது உதவி தேவைப்பட்டமை ஆகும்.
   (4) ஸஹாபாக்கள் புது இடங்களுக்குச் சென்று, அங்குள்ள மக்களைத் திரட்டி கிலாபத்துக்கு அச்சுறுத்தலாகி விடுவர் என்ற அச்சம் ஆகும்.
   (5) ஸஹாபாக்கள் மதீனாவிலிருந்து வெளியேறினால் முஸ்லிம் சமூகத்தில் எழும் புதிய பிரச்சினைகள் தொடர்பாக அவர்களது கருத்துகள் கிடைக்காது போகும் என்ற அச்சம் ஆகும்.

17. இஸ்லாமிய வரலாற்றில் தோற்றம் பெற்ற சிந்தனைப் பிரிவுகளுள் பெரும்பாலானவை தமக்கெனப் பிரத்தியேகமான சொற் பிரயோகங்களைக் கொண்டுள்ளன. [illegible] ஷீஆக்களது பிரதான கோட்பாடுகளைச் சுட்டும் பிரயோகங்கள் எவை ?
   (1) தகிய்யத், விலாயத், இஸ்மத், ம.்ரிபத் [illegible] ஷஹாதத், விலாயத், ஹிக்மத்
   (3) இமாமத், இஸ்மத், தகிய்யத், [illegible] கிலாபத், தகிய்யத், இமாரத்
   (5) தகிய்யத், ஹிக்மத், கிலாபத், [illegible]

[பக். 3 ஐப் பார்க்க

**18.** பின்வருவன இஸ்லாமிய சட்ட ஒழுங்கின் உள்ளடக்கங்கள் சிலவாகும்.

A – திருமணம், பலதார மணம்
B – முஆமலாத் எனும் கொடுக்கல் வாங்கல்
C – பிள்ளைப் பராமரிப்பு
D – விவாக விடுதலை
E – த.்.ஸீர் தண்டனை
F – தத்தெடுத்தல்
G – கிஸாஸ் தண்டனை
H – மஹர்

மேலுள்ளவற்றிலிருந்து இலங்கை முஸ்லிம் தனியார் சட்டம் உள்வாங்கியுள்ள அம்சங்களை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A B D F (2) A C D H (3) A C E G (4) B C D E (5) B E G H

**19.** உலகில் தோற்றம் பெற்ற பல நாகரிகங்களுள் இஸ்லாமிய நாகரிகமும் ஒன்றாகும். அதன் சிறப்புப் பண்புகளுள் ஒன்று
(1) சமூகத்தில் குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தினரை மட்டும் இலக்காகக் கொண்டிருப்பது
(2) ஆன்மீகத்தையும் லௌகீகத்தையும் இணைத்து நோக்குவது
(3) முஸ்லிம்களின் ஆட்சி இடம்பெறும் பிரதேசங்களுக்கு மட்டும் பொருத்தமாக இருப்பது
(4) ஆன்மீகத்தையும் லௌகீகத்தையும் வேறுபடுத்தி நோக்குவது
(5) அரசியலையும் சமயத்தையும் வேறுபடுத்தி நோக்குவது

**20.** கலீபா உமர் (ரழி) அவர்களின் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 'தீவானுல் பரீத்', 'தீவானுல் ஜுன்த்' என்பன குறித்து நிற்பன முறையே,
(1) நீதித் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் என்பனவாகும்.
(2) பதிவேட்டுத் திணைக்களம், தபால் திணைக்களம் என்பனவாகும்.
(3) தபால் திணைக்களம், இராணுவத் திணைக்களம் என்பனவாகும்.
(4) பதிவேட்டுத் திணைக்களம், நீதித் திணைக்களம் என்பனவாகும்.
(5) தபால் திணைக்களம், பதிவேட்டுத் திணைக்களம் என்பனவாகும்.

● **21** தொடக்கம் **25** வரையான ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. அக்கூற்றுகள் பற்றிய மிகப் பொருத்தமான தொடர்பைக் காட்டும் சரியான விடையினைப் பின்வரும் அட்டவணையிலுள்ள இலக்கம் (1), (2), (3), (4), (5) என்பவற்றிலிருந்து தெரிவுசெய்க.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | சரியானது | பிழையானது |
| (3) | பிழையானது | பிழையானது |
| (4) | பிழையானது | சரியானது |
| (5) | சரியானது | முதலாம் கூற்றைத் தெளிவாக விளக்குகிறது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **21.** | இலங்கையில் மிகப் பழமை வாய்ந்த இறை இல்லம் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் அப்ரார் ஆகும். | சுல்தான் ஸைபுதீன் சதூஸ் தலைமையிலான முஸ்லிம் படை அணி, ஐன் ஜாலூத்தில் அடைந்த வெற்றி, மங்கோலியரின் வெற்றிப் பயணத்தைத் தடுத்து நிறுத்தியது. |
| **22.** | அப்துல்லாஹ் பின் உரைகத் என்ற நபித் தோழர் மதீனா ஹிஜ்ரத்தின்போது நபி (ஸல்) அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தார். | அல்-குர்ஆனின் மொத்த 114 அத்தியாயங்களில் 2/3 இற்கும் அதிகமானவை மக்கீ சூராக்களாகும். |
| **23.** | ஜமாஅதுத் தப்லீ.். இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டது. அதன் ஸ்தாபகர் மௌலானா இல்யாஸ் (ரஹ்) அவர்கள் மறைந்ததன் பின் மௌலானா ஸகரிய்யா அவர்கள் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். | உஸ்மானியராட்சி ஸ்திரமடைந்திருந்த காலத்திலேயே தளபதி ஹஜ்ஜாஜ் பின் யூசுப் இந்தியாவை நோக்கிப் படையெடுத்தார். |
| **24.** | ஸிர்ஹிந்த் (ரஹ்), ஷாஹ் வலியுல்லாஹ் (ரஹ்) ஆகிய இருவரும் இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்த அறிஞர்கள் ஆவர். | பிக்ஹுக் கலையில் மத்ஹபுகள் தோன்றியதைப் போன்று தஸவ்வுப் கலையில் தரீக்காக்கள் தோற்றம் பெற்றன. |
| **25.** | அஸ்-ஸஹ்ராவி என்பாரின் அத்-தஸ்ரீப் என்ற நூலில் அறுவைச் சிகிச்சை பற்றிய குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. | யவ்முல் கியாமா, யவ்முல் ஆகிரா, யவ்முத்தீன் ஆகிய சொற்கள் மரணத்தின் பின்னரான வாழ்வுடன் தொடர்புடைய சொற்களாகும். |

[பக். 4 ஐப் பார்க்க

4680

**26.** பின்வரும் கூற்றுகளுள் **தவறான** கூற்று எது ?
(1) திம்மீக்களிடமிருந்து பெறப்பட்ட வரி 'ஜிஸ்யா' என அழைக்கப்பட்டது.
(2) அறிஞர் சித்திலெவ்வையினால் 'அஸன்பே சரித்திரம்' என்ற நாவல் எழுதப்பட்டது.
(3) 'ஜாமிஉல் குர்ஆன்' எனும் சிறப்புப் பெயர் அபூபக்ர் (ரழி)க்கு உரியதாகும்.
(4) மஸ்ஜித்களில் 'மிஹ்ராப்' என்பது கிப்லாத் திசையைச் சுட்டும் அடையாளமாகும்.
(5) கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மன்னன் செனரத் கண்டி இராச்சியத்தில் குடியேற்றினான்.

**27.** நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்றமை பற்றிக் கேள்வியுற்ற குறைஷிகள் நபி (ஸல்) அவர்களைப் பிடித்து வருபவருக்கு 100 ஒட்டகங்கள் சன்மானமாக வழங்கப்படும் என அறிவிப்புச் செய்தனர். இதில் ஆர்வம் கொண்ட ஒருவர் நபி (ஸல்) அவர்களைத் தேடிச் சென்று நெருங்கியபோதும் நபிகளாரைப் பிடிக்க முடியவில்லை. அவரின் பெயர்
(1) உக்பா பின் ஹிஷாம்
(2) ஸுஃப்யான் பின் முஆவியா
(3) ஆமிர் பின் புஹைரா
(4) அபுல் ஹகம் பின் ஹிஷாம்
(5) ஸுறாகா பின் மாலிக்

**28.** இலங்கை மன்னர் ஒருவரால் எகிப்துக்கு அனுப்பப்பட்ட தூதுக்குழுவொன்றுக்குத் தலைமை தாங்கியவர்
(1) களுகமுவ உதுமா லெவ்வே
(2) அபூ உஸ்மான்
(3) வெதராலகே அபூபக்ர் புள்ளே
(4) உஸ்மான் லெவ்வே மௌலா முஹாந்திரம்
(5) இஸ்மாயில் லெவ்வே

**29.** இந்திய உப கண்டத்தில் முஸ்லிம் ஆட்சியாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களுள் ஒன்று 'குதுப்மினார்' ஆகும். அதனை நிர்மாணித்தவர்
(1) சுல்தான் குதுபுதீன் ஐபக்
(2) மன்னர் ஔரங்கஸீப்
(3) சுல்தான் தைமூர்
(4) மன்னர் ஸிறாஜ் பகதூர் ஷாஹ்
(5) மன்னர் ஹுமாயூன்

**30.** பின்வருவனவற்றுள் மிகச் சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) ஹதீஸ்கள் ரிவாயத் செய்யப்பட்டமைக்கான காரணங்களை 'அஸ்பாபுன் நுஸூல்' என்பர்.
(2) தஜ்தீத் முயற்சிகளை முன்னெடுப்பவர் 'முஜ்தஹித்' ஆவார்.
(3) முத்தபகுன் அலைஹி என்பது முதவாதிர் வகை ஹதீஸ் ஒன்றாகும்.
(4) பெரும்பான்மையினர் இணக்கம் காட்டும் இஜ்மா, இஜ்மா அக்ஸரிய்யா எனப்படுகிறது.
(5) தப்ஸீருல் குர்ஆனில் அழீம் என்ற அல்-குர்ஆன் விளக்கவுரையை இமாம் குர்துபீ (ரஹ்) அவர்கள் எழுதியுள்ளார்கள்.

● பின்வருவன முஸ்லிம் மக்களிடையே பிரபல்யமாகவுள்ள சொற்கள் சிலவாகும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு **31 – 33** வரையான வினாக்களுக்கு விடை தருக.

A – இஜ்மா அஸ்-ஸுகூதி
B – மத்ஹப்
C – முஹ்கம் முதஷாபிஹ்
D – முஹாஸபா
E – ஷரஉ மன் கப்லனா
F – மதன்
G – ஹுகும்
H – முஜாஹதா
I – முதவாதிர்
J – முராகபா
K – முரீத்
L – தக்லீத்
M – பரஉ

**31.** மேலுள்ளவற்றுள் கியாஸின் கூறுகள்
(1) A யும் L உம்
(2) B யும் C யும்
(3) G யும் F உம்
(4) G யும் M உம்
(5) I யும் M உம்

**32.** மேலுள்ளவற்றுள் தஸவ்வுப் கலையுடன் தொடர்புபடுவன
(1) B G J K
(2) B C G M
(3) B J K L
(4) K D H J
(5) K D L M

**33.** மேலுள்ளவற்றுள் இடம்பெற்றுள்ள துணைச் சட்ட மூலாதாரம்
(1) A
(2) B
(3) E
(4) F
(5) M

**34.** நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட அகபா உடன்படிக்கையின் நியதிகளுள் ஒன்றாக் அமைந்தது,
(1) பாவங்கள் செய்யாதிருப்பது.
(2) வளங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்வது.
(3) மக்காவை விட்டு வெளியேறாதிருப்பது.
(4) திம்மீக்களைப் பாதுகாப்பது.
(5) அல்-குர்ஆனை மனனம் செய்வது.

[பக். 5 ஐப் பார்க்க

- பின்வருவன இஸ்லாமிய உலகில் பிரபல்யம் பெற்ற சில இடங்களின் பெயர்களாகும். அவற்றைக் கவனத்திற் கொண்டு **35 – 37** வரையுள்ள வினாக்களுக்கான விடைகளைத் தெரிவுசெய்க.

| | |
|---|---|
| A – மக்கா | B – மதீனா |
| C – அபீஸீனியா | D – டமஸ்கஸ் |
| E – புஹாரா | F – பக்தாத் |
| G – தாயிப் | H – காஸா |
| I – இஸ்தான்பூல் | J – கொரடோவா |
| K – ஸமர்க்கந்து | L – ஜீலான் |

**35.** மேலுள்ளவற்றுள் நபி (ஸல்) அவர்கள் தனது தஃவாவுக்கு வாய்ப்பாக அமையும் என எதிர்பார்த்த இடங்கள்
(1) B C G (2) B D I (3) B G H (4) C D F (5) C E G

**36.** இமாம்களான ஷாபிஈ (ரஹ்), புஹாரி (ரஹ்) ஆகிய இருவரதும் பிறப்பிடங்கள் முறையே
(1) E I (2) H E (3) H K (4) I J (5) J H

**37.** உமையா, அப்பாஸிய, உஸ்மானிய ஆட்சிகளின் தலைநகர்களாக அமைந்தவை முறையே
(1) B D E (2) B F I (3) D F I (4) D F J (5) D I J

**38.** போலி நபி முஸைலமாவை வெற்றி கொள்வதற்காக கலீபா அபூபக்ர் (ரழி) அவர்களால் அனுப்பப்பட்ட முஸ்லிம் படையணிக்குத் தலைமை தாங்கியவர்
(1) காலித் பின் ஸஈத் (ரழி) (2) ஆலா பின் ஹழ்ரமி (ரழி) (3) ஹுதைபா பின் முஹ்ஸின் (ரழி)
(4) காலித் பின் வலீத் (ரழி) (5) இக்ரிமா பின் அபீ ஜஹ்ல் (ரழி)

**39.** ஹதீஸ் கலையில் 'மௌழூஆத்' என்பதன் பொருள்
(1) 'ஸஹீஹுல் புஹாரி' என்ற கிரந்தத்தில் பதியப்பட்டுள்ளவை
(2) கருத்துத் தெளிவற்ற, ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துகளைப் புலப்படுத்துபவை
(3) இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் உறுதிப்படுத்திய ஹதீஸ்கள்
(4) நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறியதாக இட்டுக்கட்டப்பட்டவை
(5) அஹ்லுல் பைத்தினரால் ரிவாயத் செய்யப்பட்டவை

**40.** நபி (ஸல்) அவர்களின் இறுதி ரமழானின் போது, அதுவரை அருளப்பட்டிருந்த அல்குர்ஆன் வசனங்களை ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ஓதிக்காட்டினார்கள். அச்சந்தர்ப்பத்தில் அவருடன் சேர்ந்து அல்குர்ஆன் முழுவதையும் செவிமடுத்த ஸஹாபி
(1) ஸைத் பின் ஸாபித் (ரழி) (2) அபூபக்ர் (ரழி) (3) மஆத் பின் ஜபல் (ரழி)
(4) முஸ்அப் பின் உமைர் (ரழி) (5) அலி பின் அபீ தாலிப் (ரழி)

**41.** ஐரோப்பியரால் Avicenna, Averroes எனும் பெயர்களால் அறிமுகம் செய்யப்பட்ட முஸ்லிம் மருத்துவ அறிஞர்கள் இருவரதும் இயற்பெயர்கள் முறையே
(1) அஸ்-ஸீராஸி, அபுல் வபா என்பனவாகும். (2) அலி பின் ஸீனா, இப்னு ருஸ்து என்பனவாகும்.
(3) அஸ்-ஸஹ்ராவி, அர்-ராஸி என்பனவாகும். (4) அலி பின் ஸீனா, இப்னு ஸுஹ்ர் என்பனவாகும்.
(5) அர்-ராஸி, அஸ்-ஸஹ்ராவி என்பனவாகும்.

**42.** அறிஞர் சித்திலெவ்வையினால் ஆரம்பிக்கப்பட்ட 'முஸ்லிம் நேசன்' எனும் பத்திரிகையை சித்திலெவ்வையின் பின் முன்னெடுத்துச் சென்றவர்களில் ஒருவர்
(1) W. M. A. ரஹ்மான் (2) கலாநிதி T. B. ஜாயா (3) I. L. M. A. அஸீஸ்
(4) A. M. வாப்பிச்சி மரிக்கார் (5) நீதிபதி M. T. அக்பர்

**43.** கீழே **X** இல் நூல்கள் சிலவற்றின் பெயர்களும் **Y** இல் அவற்றின் ஆசிரியர்களின் பெயர்களும் காட்டப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| (i) முரூஜுஸ் ஸஹப் | A – ஸகரிய்யா அர்-ராஸி |
| (ii) ஸீரதுன்னபி | B – அல்-மஸ்ஊதி |
| (iii) கிதாபுஸ் ஸிமா | C – இபுனு முக்லா |
| (iv) அல்-ஹாவி | D – இப்னு ஹிஷாம் |
| (v) அக்லாம் அஸ்ஸித்தா | E – இமாம் கஸ்ஸாலி |

**X** இற்கமைய **Y** யைச் சரியாக ஒழுங்குபடுத்தினால் வரும் விடை
(1) A C B E D (2) B D E A C (3) B E D A C (4) C E D A B (5) E A C D B

The National e-Learning Portal for the General Education

[பக். 6 ஐப் பார்க்க

**44.** பைஸாந்தியருக்கெதிரான போராட்டத்தின்போது முஸ்லிம் படையணியை வழிநடாத்திக் கொண்டிருந்த தளபதியை கலீபா உமர் (ரழி) அவர்கள் பதவியிறக்கம் செய்தார்கள். அதன் பின்னர் அத்தளபதி சாதாரண போர்வீரனாகப் போராடி வெற்றிக்குத் துணை செய்தார். அவரது பெயர்

(1) ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரழி) (2) அலி பின் அபீ தாலிப் (ரழி)
(3) அம்ரிப்னுல் ஆஸ் (ரழி) (4) முஆவியா (ரழி)
(5) காலித் பின் வலீத் (ரழி)

**45.** பின்வரும் சிற்றரசுகளுள் முஸ்லிம் இந்தியாவிற்கு **உரித்தாகாத** சிற்றரசு

(1) ஐபக் (2) லோடி (3) ஐயூபி
(4) துக்லக் (5) கில்ஜி

**46.** பின்வரும் ஆறு கூற்றுகளில் நான்கு கூற்றுகள் உண்மையானவை ஆகும்.

A – ஹிஜ்ரத் நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு ஹிஜ்ரி ஆண்டு கணிக்கப்படுகிறது.
B – சுல்தான் பாதிஹ், கொன்ஸ்தாந்துநோபளை வெற்றி கொண்டார்.
C – ஜாமிஉல் அஸ்ஹரை ஐயூபிய ஆட்சியாளர்கள் ஸ்தாபித்தனர்.
D – ஹுஸைன் (ரழி) அவர்கள் கர்பலா என்ற இடத்தில் கொலை செய்யப்பட்டார்கள்.
E – சுதந்திரம் கிடைத்த பின்பே இலங்கையில் முஸ்லிம் தனியார் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
F – இலங்கைப் பாராளுமன்றத்தில் முதல் முஸ்லிம் சபாநாயகர் H. S. இஸ்மாயில் ஆவார்.

மேற்படி கூற்றுகளுள் **பிழையானவை**

(1) A யும் D யும் (2) A யும் F யும் (3) B யும் D யும்
(4) B யும் F யும் (5) C யும் E யும்

**47.** நபி (ஸல்) அவர்கள் குறைசியரின் கொடுமைக்கஞ்சி தன் தோழர்கள் சிலரை அபீஸீனியாவுக்கு **அனுப்பிவைத்தார்கள்.** அபீஸீனிய மன்னனான நஜ்ஜாஸியிடம் சென்றடைந்த அக்குழுவுக்குத் தலைமை தாங்கிய ஸஹாபி

(1) அபூ ஐயூப் அல்-அன்ஸாரி (ரழி) (2) ஜஃபர் பின் அபீ தாலிப் (ரழி)
(3) அபூதர் அல்-கிப்பாரி (ரழி) (4) உஸ்மான் பின் அப்பான் (ரழி)
(5) அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி)

**48.** கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் பதவி வகித்த அமைச்சுகளுள் ஒன்று

(1) கல்வி அமைச்சு (2) கலாசார அமைச்சு (3) தொழில் அமைச்சு
(4) நீதி அமைச்சு (5) விவசாய அமைச்சு

**49.** பின்வருவனவற்றுள் தப்ஸீர், ஹதீஸ் ஆகிய இரு கலைகளுடனும் தொடர்புடையது

(1) அஸ்பாபுன் நுஸூல் (2) மக்கி, மதனி
(3) அல்-முஹ்கம் வல் முதஷாபிஹ் (4) அந்நாஸிக் வல் மன்ஸூக்
(5) அல்-இஸ்னாத் வல் மதன்

**50.** "அல்-குர்ஆன் படைக்கப்பட்டது" என்ற முஃதஸிலா சிந்தனைப் பிரிவின் கருத்தை கடுமையாக எதிர்த்து நின்றமையினால் அப்பாஸிய கலீபாவினால் சிறை வைக்கப்பட்ட அறிஞர்

(1) இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) (2) இமாம் அபுல் ஹஸன் அல்-அஷ்அரீ (ரஹ்)
(3) இமாம் கஸ்ஸாலி (ரஹ்) (4) இமாம் அந்நவவீ (ரஹ்)
(5) இமாம் இபுனு தைமியா (ரஹ்)

* * *